# இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்

புள்ளிவிபரத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி


கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு மற்றும் பணிகள் என்பனவற்றின் பெறுபேறுகள்

## தயாரிப்பு நடவடிக்கைகள் மெதுவடைந்தது

**தயாரிப்புத் துறை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்**, 2018 ஓகத்தில் பதிவு செய்யப்பட்ட 58.2 சுட்டெண் புள்ளிகளிலிருந்து 2018 செத்தெம்பரில் 54.1 சுட்டெண் புள்ளிகளுக்கு குறைவடைந்திருந்தது. செத்தெம்பரில் தயாரிப்பு நடவடிக்கைகளில் அவதானிக்கப்பட்ட மெதுவடைதலுக்கு புதிய கட்டளைகள் மற்றும் தயாரிப்பில் விசேடமாக உணவு மற்றும் குடிபான உற்பத்திகளின் நடவடிக்கைகளில் ஏற்பட்ட மெதுவடைதலினால் பிரதானமாக தூண்டப்பட்டது. உள்நாட்டு நாணயத்தின் பெறுமதி தேய்வினூடாக இறக்குமதி செய்யப்படுகின்ற மூலப்பொருட்களின் அதிகரித்திருந்த உள்ளீட்டு செலவினம் காரணமாக இக்காலப்பகுதியில் விற்பனை விலைகளை அதிகரிக்க நேரிட்டது என பதிலிறுப்பாளர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர். இது அவர்களுடைய பொருட்களுக்கான கேள்வியினை குறைத்ததுடன், இதன் விளைவாக புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்திகள் குறைவடைந்தன. எவ்வாறாகினும், பிரதானமாக ஏற்றுமதி சார்ந்த புடவைகள், அணியும் ஆடைகள், தோல் மற்றும் அதனுடன் சார்ந்த உற்பத்தி பொருட்களுக்கான புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தி இக்காலப்பகுதியில் அதிகரித்திருந்தது. ஒட்டுமொத்த தொழில்நிலை மற்றும் கொள்வனவுகளின் இருப்பும் மெதுவடைந்திருந்தது. அதேவேளை, நீட்சியடைந்த நிரம்பலர் வழங்கல் நேரமானது வழக்கமாக பொருளாதாரத்தின் குறுகிய காலத்தில் நடவடிக்கைகளின் விரிவாக்கத்தின் துரித வளர்ச்சியை குறித்துக்காட்டுகின்றது. எவ்வாறாயினும், இச்சந்தர்ப்பத்தில், நீட்சியடைந்த நிரம்பலர் நேரமானது உற்பத்தியாளர்களின் உள்நாட்டு நாணய பெறுமதி தேய்வின் முன்னோக்கிய உறுதித்தன்மை எதிர்பார்க்கப்பட்டமை காரணமாக தாமாகவே உள்ளீட்டு பொருட்களின் கிடைப்பனவு நேரத்தினை அதிகரித்தமையினால் ஏற்பட்டதாகும். ஆகையால், இது பொருளாதார நடவடிக்கைகளில் ஒரு விரிவாக்கத்தினை குறித்துக்காட்டவில்லை. ஒட்டுமொத்தமாக, கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்ணின் அனைத்து துணைச் சுட்டெண்களும் நடுநிலையான 50.0 எல்லைக்கு மேலான பெறுமானங்களை பதிவு செய்து ஒகத்துடன் ஒப்பிடுகையில் செத்தெம்பரில் மெதுவான வீதத்தில் விரிவடைந்தமையினைக் காண்பித்தது.

| | ஆ/மா | சன | பெப் | மாச் | ஏப் | மே | யூன் | யூலை | ஓகத் | செத் | ஒத் | நவெ | திசெ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கொள்வனவு முகாமையாளர் சுட்டெண், தயாரிப்பு | 2016 | 51.9 | 55.3 | 60.7 | 41.6 | 47.9 | 55.1 | 50.6 | 53.5 | 57.7 | 56.5 | 58.4 | 58.3 |
| | 2017 | 56.2 | 57.1 | 66.5 | 41.8 | 57.9 | 56.1 | 54.3 | 54.4 | 59.0 | 54.8 | 58.8 | 59.1 |
| | 2018 | 51.7 | 55.6 | 65.6 | 45.5 | 60.6 | 57.6 | 57.2 | 58.2 | **54.1** | - | - | - |

| மாறி | ஓகத்து | செத்தெம்பர் | +/- | சாராம்சம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **58.2** | **54.1** | - | அதிகரிப்பு, மெதுவான வீதத்தில் |
| கொ.மு.சு துணைச்சுட்டெண்கள் | | | | |
| புதிய கட்டளைகள் | 60.5 | 53.0 | - | அதிகரிப்பு, மெதுவான வீதத்தில் |
| உற்பத்தி | 60.5 | 53.5 | - | அதிகரிப்பு, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 56.5 | 55.5 | - | அதிகரிப்பு, மெதுவான வீதத்தில் |
| கொள்வனவுகளின் இருப்பு | 57.0 | 56.0 | - | அதிகரிப்பு, மெதுவான வீதத்தில் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | 53.0 | 54.0 | + | நீட்சி, உயர்வான வீதத்தில் |




## பணிகள் துறை வளர்ச்சி மேலும் மெதுவடைந்தது

**பணிகள் துறை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்,** 2018 ஓகத்தில் பதிவு செய்யப்பட்ட 57.0 சுட்டெண் புள்ளிகளிலிருந்து செத்தெம்பர் 2018ல் 53.0 சுட்டெண் புள்ளிகளுக்கு வீழ்ச்சியடைந்தது. இது பணிகள் துறையானது 2018 செத்தெம்பரில் குறைந்தளவிலான வேகத்தில் அதிகரித்திருந்தமையினை காண்பித்ததுடன் அளவீடு 2015 மேயில் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து மிகக்குறைந்தளவிலான பெறுமதியினையும் பதிவு செய்திருந்தது. பணிகள் துறையில் மெதுவடைதலானது பிரதானமாக தங்குமிடம், உணவு மற்றும் குடிபானம், மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம், நலத்துறை மற்றும் ஏனைய தனியாள் பணிகள் துறைகள் போன்றவற்றின் வியாபார நடவடிக்கைகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்களவிலான மெதுவடைதலினால் பிரதானமாக ஏற்பட்டது. சுற்றுலாத்துறையிலான பருவகாலம் முடிவடைதல் மற்றும் இறக்குமதி அளவின் மெதுவடைதல் என்பன அவதானிக்கப்பட்ட மெதுவடைதலுக்கு பிரதான காரணங்களாக சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. நிதியியல் பணிகள் மற்றும் காப்புறுதி துறைகளில் புதிய வியாபாரங்கள் மெதுவடைந்திருந்தன. தொழில்நிலை மட்டமானது செத்தெம்பரில் குறைவான வீதத்தில் அதிகரித்திருந்ததுடன் இதற்கு வியாபார நடவடிக்கைகளில் ஏற்பட்ட மெதுவடைதல் பகுதியளவில் செல்வாக்கு செலுத்தியிருந்தது. பணிகள் வழங்குனர்களின் அடுத்த மூன்று மாதங்களுக்கான வியாபார நடவடிக்கைகள் மீதான தோற்றப்பாடானது ஒரு குறைவான வீதத்தில் உறுதியடைந்திருந்தது. எரிபொருள் விலைகளின் மேல்நோக்கிய திருத்தம், உள்நாட்டு நாணயத்தின் பெறுமதி தேய்வு மற்றும் இறக்குமதி மீதான கட்டுப்பாடுகள் என்பன அவர்களுடைய நம்பிக்கையை மோசமாக பாதித்திருந்தன என பதிலிறுப்பாளர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர். பணிகள் துறையில் விதிக்கப்பட்ட விலைகள் மாதகாலப்பகுதியில் எரிபொருள் விலைகளின் மேல்நோக்கிய திருத்தம் மற்றும் பெறுமதி தேய்வடைந்த உள்நாட்டு நாணயம் காரணமாக ஒரு உயர்வான வீதத்தில் அதிகரித்திருந்தது. பணிகள் துறையில் எதிர்பார்க்கப்பட்ட தொழிலாளர் செலவானது செத்தெம்பரிலும் அதிகரித்திருந்தது.

| | ஆ/மா | சன | பெப் | மாச் | ஏப் | மே | யூன் | யூலை | ஓகத் | செத் | ஒத் | நவெ | திசெ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கொள்வனவு முகாமையாளர் சுட்டெண், பணிகள் | 2016 | 58.0 | 59.3 | 61.6 | 54.7 | 58.1 | 56.3 | 57.8 | 61.2 | 57.7 | 59.3 | 59.7 | 59.8 |
| | 2017 | 57.5 | 57.3 | 60.8 | 54.2 | 55.3 | 59.2 | 59.1 | 60.1 | 57.0 | 55.3 | 57.4 | 61.2 |
| | 2018 | 56.6 | 58.4 | 58.0 | 53.2 | 56.9 | 58.7 | 57.8 | 57.0 | **53.0** | - | - | - |

| மாறி | ஓகத்து | செத்தெம்பர் | +/- | சாராம்சம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **57.0** | **53.0** | - | அதிகரிப்பு, மெதுவான வீதத்தில் |
| <u>கொ.மு.சு துணைச்சுட்டெண்கள்</u> | | | | |
| புதிய வியாபாரங்கள் | 60.0 | 55.2 | - | அதிகரிப்பு, மெதுவான வீதத்தில் |
| வியாபார நடவடிக்கைகள் | 63.7 | 51.0 | - | அதிகரிப்பு, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 55.8 | 54.2 | - | அதிகரிப்பு, மெதுவான வீதத்தில் |
| நிலுவையிலுள்ள பணிகள் | 42.8 | 45.0 | + | வீழ்ச்சி, மெதுவான வீதத்தில் |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்ப்பு | 62.8 | 59.6 | - | சாதகம், மெதுவான வீதத்தில் |

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் பணிகள்**



**தொழில்நுட்பக் குறிப்பு:**

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்கிறது.

கொ.மு.சு $=50$ மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது.

கொ.மு.சு $>50$ மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது.

கொ.மு.சு $<50$ மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது.

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | | |
|---|---|---|
| தொழில்நிலை | : | நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : | உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலின் வழங்கல் நேரம் | : | கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| வேலையில் நிலுவையிலுள்ள பணிகள் | : | வியாபார நடவடிக்கையின் அதிகரித்த பாய்ச்சலின் காரணமாக பூர்த்தி செய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.